# தமிழ்த்துறை

# இளநிலைப் பட்டவகுப்பு

# பிறதுறை விருப்பப்பாடம்:

# தமிழ் இலக்கிய வரலாறு

**பாட ஆசிரியர்: மோ. செந்தில்குமார்**

## அலகு 1:

## பாடப்பகுதி

1. தமிழின் தொன்மையும் முத்தமிழ்ச் சிறப்பும்
2. சங்கமும் தமிழும்
3. அகத்தியமும் அகத்தியரும்
4. முதல் நூல் தொல்காப்பியம்

# 1

# தமிழின் தொன்மையும் முத்தமிழ்ச் சிறப்பும்

உலகில் உள்ள ஒவ்வொரு இனத்துக்கும் வரலாறு உண்டு. அந்த இனம் பேசிய மொழி, வாழ்ந்த நாடு, பண்பாடு, பழக்க வழக்கம் முதலியவை கால மாற்றத்திற்கு ஏற்ப திரிந்தும் வளர்ந்தும் இருப்பதைக் காணமுடிகிறது. இவற்றை வரலாற்றின் மூலம்தான் அறிய முடியும்.

மொழியாலும் இடத்தாலும் கொள்கையாலும் வேறுபட்ட மனித இனங்களில் மிகத் தொன்மையானது என்று தமிழினத்தைக் கூறலாம். இவ்வினம் பழைய கற்காலத்திற்கும் முற்பட்டது என்பர். வரலாற்று ஆசிரியர்களின் ஆய்வின்படி முந்நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தனித்த இனமாகத் தழைத்து ஓங்கி வளர்ந்தது.

## தமிழினம்

லினார்மெண்ட் என்ற ஆய்வாளர், ஆரியர்கள் தமிழகத்தில் புகுவ
தற்கு முன்னரே தமிழர்கள் குமரிமுனையில் இருந்து இமயமலை வரை
பரவியிருந்தனர் என்று கூறுகிறார். மேலும் இந்தியாவுக்கு ஹேவல் என்ற
அறிஞர் சுமேரியப் பகுதியில் தமிழர் இருந்துள்ளனர் என்று கூறுகிறார்.
மாம்கர் என்ற மற்றொரு அறிஞர் கி.மு.2500 அளவில் இந்தியாவில்
மிகச்சிறந்த நாகரிகமுடைய இனம் வாழ்ந்ததைக் குறிப்பிடுகிறார். ரைஸ்
டேவிட்ஸ் என்ற ஆய்வாளர் தமிழர் கிரேக்கர்களோடு மிக நெருங்கிய
தொடர்பு கொண்டிருந்ததால்தான் கிரேக்க மொழியில் தமிழ்ச்சொற்கள்
காணப்படுகின்றன என்கிறார். வட மொழியிலும் கூட சொற்கள் காணப்
படுகின்றன என்று டாக்டர் கால்டுவெல்லும் ஜி.யு.போப்பும் கூறுகின்றனர்.

இந்தச் செய்திகளையெல்லாம் காணும்போது உலகில் பழைமை
யான நாகரிகங்களில் ஒன்றாகத் தமிழர் நாகரிகம் விளங்கியதை
அறிய முடிகிறது. மேலும் நாகரிக வளம் பெற்ற பிறஇனங்களோடும்
பழைமையான கிரேக்க இலத்தீன், மற்றும் வடமொழிகளுடனும் ஒப்பு
வைத்துக் கருதத்தக்கது தமிழ்மொழி என்பதும் புலனாகின்றது.

சிறந்த நாகரிக வளர்ச்சியையும் ஆட்சிச் சிறப்பையும் கொண்ட தமிழினம் தொல்காப்பியர் காலத்தில் புவியியல் எல்லையால் விரிந்து பரந்து இருந்தது என்பதை அறிய முடிகிறது. தொல்காப்பியத்துக்குப் பாயிரம் எழுதிய பனம்பாரனார் தமிழ்நாட்டின் எல்லையை

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லு லகத்து"

என்று குறிப்பிடுகின்றார்.

தமிழகத்தை வடமொழியில் திராவிடம் என்று கூறும் மரபு இருந்து வந்தது. மிகப் பழங்காலத்தில் தென்னிந்தியாவில் வாழ்ந்த தமிழினம் வடக்கே குடியேறிச் சிந்துச் சமவெளியில் உயரிய வாழ்க்கை வாழ்ந்தது. ஆரியர்கள் வருகையால் இனக் கலப்பும் மொழிக் கலப்பும் நிகழ, திராவிட இனம் தனித்தன்மையை இழக்க ஆரம்பித்தது. தென்னிந்தியாவில் வாழ்ந்த தமிழினம் வடக்கே சென்றதற்குக் காரணங்கள் உண்டு. தமிழர் வாழ்ந்த தென்பகுதி கடல் கோளால் அழிந்தது. அப்போது இங்கிருந்த தமிழர்கள் வடதிசை நோக்கிச் சென்றனர். பாண்டியனின் வடபுலப் படையெடுப்பும் நிகழ்ந்தது. வெற்றி கண்ட பாண்டியன் இமய மலையையும் வடபுலத்தையும் தன்னாட்சிக்கு உட்படுத்தினான். பின் தென் திசையில் இருந்து ஆண்டான். இந்தச் செய்தியைச் சிலப்பதிகாரம்,

"பஃறுளி ஆற்றுடன் பன்மலையடுக் கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசை கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி"

என்று கூறுகிறது. சிலம்புக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லாரும் இக்கருத்தை வலியுறுத்துகிறார்.

இலெமூரியாப் பகுதியில் வாழ்ந்த தமிழர்தாம் உலக நாகரிகத் திற்கே வித்திட்டனர் என்று ஜெர்மானியக் கவிஞர் ஹெக்கல் கூறுகிறார். பேராசிரியர் கீன் என்பவர் தென்னாட்டின் ஒரு பகுதியாகக் கருதப்பட்ட சாவகத்தில்தான் மனித வாழ்வு ஆரம்பமாயிற்று என்பதை வலியுறுத்து கிறார். ஈழத்திலும் தென்னகத்திலும் காணப்படும் பாறைகள் மிக மிகத் தொன்மை வாய்ந்தவை என்று ஸ்காட் எலியட் என்பவர் கூறுகிறார். தொன்மையான இப்பகுதியில் தோன்றிய மக்களும் தொன்மையானவர் களாகத் தான் இருக்க வேண்டும். புறப்பொருள் வெண்பாமாலை பாடிய ஐயனாரிதனார்,

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
வாளொடு முன்தோன்றி மூத்தகுடி"

என்று பாடுவதும் பொருத்தமுடையதே எனலாம்.

சிந்து சமவெளியில் கண்டெடுக்கப்பட்ட புதைபொருட்களில் காணப்படும் எழுத்துக்களும் சொற்களும் பெரும்பாலும் தமிழை யொத்துள்ளன என்று ஆய்வினை மேற்கொண்ட சர்ஜான்மார்ஷலும், ஹீராஸ் அடிகளாரும் கூறுகின்றனர். மேலும் சுமேரிய எகிப்து நாகரிகங்களை விடச் சிந்துச்சமவெளி நாகரிகம் மிகப் பழமையானது என்பது அவர்களின் முடிவு.

தொல்காப்பியர் காலத்திற்குப்பின் தமிழகத்தின் எல்லை சுருங்கி விட்ட போதும் தமிழ் மொழியில் இருந்து பல சேய்மொழிகள் தோன்றின. இதனை மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை,

"கன்னடமும் களிதெலுங்கும்
கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்"

என்று பாடுகின்றார். இவ்வாறு பல மொழிகளுக்குத் தாயாக இருந்தாலும் இளமையில் என்றும் மாறாது வழங்கு மொழியாக, உயர்தனிச் செம்மொழியாகத் தமிழ்மொழி விளங்குகிறது.

## தமிழின் தொன்மை

தமிழர் பலவகையாலும் மிகத்தொன்மையானவர் என்பதால் அவர் பேசும் மொழியும் மிகத் தொன்மையானது என்பது எளிதில் விளங்கும். தமிழ்மொழியின் பழமையை அறியமுடியாத புராண இதிகாசப் புலவர்கள் இந்த மொழி சிவனால் அகத்திய முனிவருக்குக் கற்பிக்கப்பட்டது என்று கூறினர். வடமொழியைவிட இலக்கியச்சிறப்பும் பழைமையும் உடைய தமிழ்மொழியை ஏற்க இயலாத வடமொழி யாளர் இம்மொழிகள் இரண்டும் சிவனின் உடுக்கையில் தோன்றியவை என்று உரைத்தனர்.

தமிழ்மொழி வரலாறு அறிய இயலாத காலத்தே தோன்றிய மொழி. ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ், இலக்கிய வளத்தையும் இலக்கணச் சிறப்பையும் கொண்ட உயர்தனிச் செம்மொழியாக வடிவம் பெற்றுவிட்டது. உலக மொழிகளில் மிகப்பழமையானவை என்று கிரேக்க, இலத்தீன், வடமொழி, தமிழ் ஆகியவற்றைக் கூறுவது மரபு.

இவற்றில் இந்திய மொழிகளில் மற்றொன்றான வடமொழி இன்று வழக்கிழந்துவிட்டதைக் காணுகிறோம். வடமொழி தோன்றுவதற்கு முன்னரே தமிழ் உலகமொழிகளோடு தொடர்பு கொண்டிருந்தது என்பர்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் உலக இலக்கியம் என்ற நூலில் கிரேக்க இலக்கியத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது என்று கூறுகின்றார். இவற்றை நோக்கப் பழைமைக்குப் பழைமையாயும் புதுமைக்குப் புதுமையாயும் விளங்கும் பெற்றியது தமிழ்மொழி என்பது விளங்கும்.

சிந்துசமவெளி பற்றிய ஆய்வினை மேற்கொண்ட ஹீராஸ் பாதிரியார் இந்திய மொழிகளில் மிகத் தொன்மை வாய்ந்தது தமிழ் மொழி என்று குறிப்பிடுகின்றார். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் கண்ட டாக்டர் கால்டுவெல் காட்டும் பல சான்றுகள் தமிழ் மிகத் தொன்மையான மொழி என்பதை விளக்குகின்றன. இலக்கிய வழக்கிற்கும் பேச்சு வழக்கிற்கும் இடையே காணப்படும் வேறுபாடே மொழியின் தொன்மையை விளக்கும் என்பது, விதி. அந்த வகையில் தமிழின் இலக்கிய வழக்கிற்கும் பேச்சு வழக்கிற்கும் மிகப்பெரிய வேறுபாடு இருப்பதைக்காண முடிகின்றது. மற்றைய மொழிகளில் இத்தகைய வேறுபாட்டைக் காண முடியவில்லை என்கிறார் கால்டுவெல். தமிழ் இலக்கிய வழக்கில் கடினச் சொற்களும் மிகக் குறைந்த அளவிலான வடமொழிக் கலப்பும் காணப்படுவது மொழியின் தொன்மையால்தான் என்று அவர் வலியுறுத்துகிறார்.

மேலும் இப்போதைய தமிழ்மொழிக்கும் கன்னட, தெலுங்கு மொழி களுக்கும் காணப்படும் வேற்றுமையும், பழைய தமிழ் மொழிக்கும் கன்னட, மலையாள, துளு மொழிகளுக்கும் இடைய காணப்படும் நெருங்கிய ஒற்றுமையுமே தமிழ்மொழியின் தொன்மைக்குச் சான்றாக அமைந்துள்ளன என்பது கால்டுவெல்லின் கருத்தாகும்.

மிகப் பழங்காலத்திலேயே பாண்டியர் சங்கம் வைத்து முத்தமிழ் ஆய்ந்தமை தமிழின் தொன்மைக்குச் சான்றாகும். தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலான மொழிகள் தமிழிலிருந்து கிளைத்தவை என்ற உண்மையும் தமிழின் தொன்மையை உலகிற்கு எடுத்துக் காட்டுவதாகும்.

## முத்தமிழ்

உலகத்தார் போற்றும் தமிழ்மொழியை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனப் பகுத்துரைத்தல் மரபு. முத்தமிழ்ப் பாகுபாடு

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே இருந்திருக்க வேண்டும். இசையென்ற சொல்லையும், உரையென்ற சொல்லையும், நாடகம் என்ற சொல்லையும் தொல்காப்பியர் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார். 'நாடக வழக்கினும்' என்றும் 'இசையொடு சிவணிய' என்றும் 'உரைநடை வகையே' என்றும் தொல்காப்பிய நூற்பாக்களில் முத்தமிழைக் குறிக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் காண முடிகின்றது.

'முத்தமிழ்ப் பாகுபாட்டைப் பிங்கல நிகண்டு "இயற்றமிழ் இசைத் தமிழ் நாடகத்தமிழெனவகைப்பட சாற்றினர் மதியுணர்ந் தோரே" என்று எடுத்துரைக்கின்றது. பிற்காலத்து ஔவையாரும் "சங்கத்தமிழ் மூன்றும் தா" என இறைவனிடம் வேண்டுகிறார். கம்பரும் "ஏழுலகும் புகழ் முத்து முத்தமிழ்" என்று தமிழின் சிறப்பை எடுத்துரைக்கின்றார்.

## இயற்றமிழ்

இசைத்தமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் முன்பு தோன்றிய தமிழ் இயற்றமிழாகும். தமிழ் மொழியின் உரைநடை நூல்கள் பலவும், செய்யுள் நூல்கள் பலவும் இயற்றமிழில் அடங்கும்.

## இலக்கியங்களும் இலக்கணங்களும்

சங்க இலக்கியங்களும் அவற்றின் உரைகளும், இடைக் காலத்தில் தோன்றிய கம்பராமாயணம் போன்ற நூல்களும் அவற்றின் உரைகளும் இன்று வெளிவரும் கவிதை நூல்களும், புத்திலக்கியங் களும், உரைகளும் இயற்றமிழில் அடங்கும். எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினென் கீழ்க்கணக்கு, குண நாற்பது, முத்தொள்ளாயிரம், தகடூர் யாத்திரை முதலியன இயற்றமிழ் இலக்கியங்களில் பழையன வாகும். சைவ, வைணவ, சமண, பௌத்த நூல்களும் புராணங்களும், சிற்பம், கணிதம், சோதிடம், மருத்துவம் முதலிய பல்கலை நூல்களும் சிற்றிலக்கியங்களும் இயற்றமிழ் நூல்களாக விளங்குகின்றன. கவிதை, நாடகம், சிறுகதை, புதினம், கட்டுரை என்ற நிலைகளில் இன்று இயற்றமிழ் நூல்கள் மிகுதியாக வெளிவருகின்றன.

எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என இயற்றமிழ் இலக்கணங்கள் ஐந்து வகைப்படும். தொல்காப்பியம், அவிநயம், வீரசோழியம் இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம் போன்றன ஐந்திலக்கண நூல்களாகும்.

பொருள் இலக்கணம் அகப்பொருள் இலக்கணம் என்றும் புறப்பொருள் இலக்கணம் என்றும் இருவகைப்படும் இறையனார் அகப்பொருள், நம்பியகப் பொருள், மாறனகப் பொருள் ஆகியன அகப்பொருளைப் பேசுவன. பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பா மாலை ஆகியன புறப்பொருள் பற்றியன. யாப்பிலக்கணத்தை மட்டும் அறிவிப்பன யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையும் ஆகும். அணியியல், தண்டியலங்காரம், குவலயானந்தம் போன்றவை அணி யிலக்கணத்தைத் தனியே அறிவிக்கும் நூல்கள். பன்னிருபாட்டியல், இந்திரகாளியம், வச்சணந்தி மாலை, நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் முதலியன பிரபந்த இலக்கணத்தைத் தெரிவிப்பன.

## செந்தமிழும் கொடுந்தமிழும்

இயற்றமிழ் செந்தமிழென்றும், கொடுந்தமிழென்றும் இரு வகைப் படும். பிறமொழிச் சொற்களின் கலப்பின்றித் தனித்தமிழ்ச் சொற்களால் ஆனவை செந்தமிழ் என்றும், மலையாளம், தெலுங்கு போன்ற பிற மொழிச் சொற்களின் கலப்புடன் விளங்குவதைக் கொடுந்தமிழ் என்றும் கூறுவர்.

செந்தமிழ் வழங்கிய நாடு செந்தமிழ்நாடு என்று பெயர்பெற்றது.

**"செந்தமிழ் நாடெனும் போதினிலே- இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே..."**

என்று பாரதி செந்தமிழ் நாட்டின் சிறப்பைப் பாடுகின்றான்.

**"செந்தமிழ் நாடே**
**சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும்**
**சௌந்தர பாண்டியன் எனும் தமிழ் நாடனும்**
**சங்க புலவரும் தழைத்தினி திருக்கும்**
**மங்கலப் பாண்டி வளநாடென்ப"**

என்ற நூற்பா, பாண்டிய நாடே செந்தமிழ் நாடு என்பதை வலியுறுத்து கிறது. செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு குறுநிலங்களும் கொடுந்தமிழ்ப் பகுதிகளாக அழைக்கப்பட்ட செய்தியை

**"தென் பாண்டி குட்டங் குடங் கற்கா வேண்பூழி**
**பன்றி யருவா வதன் வடக்கு - நன்றாய**
**சீத மலாடு புனனாடு செந்தமிழ் சேர்**
**ஏதமில் பன்னிரு நாட் டெண்"**

என்று பழைய வெண்பா எடுத்துக் காட்டுகின்றது.

## இசைத்தமிழ்

பண்ணோடு கலந்து தாளத்தோடுகூடி இயங்கும் செந்தமிழ், கொடுந்தமிழ்ப் பாட்டுக்களால் ஆன இலக்கிய இலக்கணங்கள் இசைத் தமிழுள் அடங்கும். கீர்த்தனங்கள், வரிப்பாட்டுக்கள், சிந்து, ஆனந்தக் களிப்பு, கும்மி, தெம்மாங்கு முதலியன இசைத்தமிழில் அடங்கும். தமிழ் மொழியில் காணும் எல்லாச் செய்யுட்களையும் இசைத்தமிழ் எனக் கருதுவாரும் உண்டு.

பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், பஞ்ச மரபு, தாள சமுத்திரம், இந்திர காளியம், தாளவகையோத்து, இசைத்தமிழ்ச் செய்யுள் துறைக்கோவை முதலியன பழங்கால இசை நூல்களாக விளங்கியிருக் கின்றன.

## தமிழ் இசை ஏழு

தமிழ் இசை ஏழு வகைப்படும். அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற பெயர் பெறும். இந்த ஏழிசையில் இருந்து பிறப்பவையே பண்களும், திறங்களும். பண்கள் என்பவை இராகங்கள் ஆகும். திறங்கள் பண்களில் இருந்து உண்டாகி வேறு வேறு பெயர் பெற்று விளங்கும்.

**"நிறை நரம் பிற்றே பண்ணெனன லாகும்**
**குறை நரம் பிற்றே திறமெனப் படுமே"**

என்று திவாகரம் பண்ணின் இயல்பையும், திறத்தின் இயல்பையும் தெளிவுபடுத்துகின்றது. பண்கள் பகற்பண்கள், இராப்பண்கள், பொதுப் பண்கள், பெரும்பண்கள், ஐந்திணைப் பண்கள், சிறுபொழுது பண்கள், பெரும் பொழுது பண்கள் எனப் பல வகைப்படும்.

இப்பண்களால் ஆகிய பாடல்களே கீர்த்தனங்கள். கீர்த்தனங்கள் உருக்கள்; வரிகள் முதலிய பெயர்களால் அழைக்கப்படும்.

சங்க காலத்தில் இசைத்தமிழுக்கு ஏற்றம் தந்து போற்றியிருப்பதை அறிய முடிகின்றது. பொருநராற்றுப்படையும், சிறுபாணாற்றுப்படை யும், பெரும்பாணாற்றுப்படையும் இசைத்தமிழ்ச் செய்தியை உள்ளடக்கிய இலக்கியங்கள். எட்டு தொகையில் ஒன்றாகிய பரிபாடல் இசையமைக்கப் பெற்ற பாக்களின் தொகுப்பாக விளங்குகிறது.

முத்தமிழ்க் காப்பியமாகச் சிறப்பிக்கப் பெறும் சிலப்பதிகாரம் இசைப் பாக்களின் களஞ்சியமாகத் திகழ்கின்றது. மங்கல வாழ்த்து, கானல்வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, ஊர் சூழ் வரி, குன்றக் குரவை ஆகிய பகுதிகள் இசையும் நாடகமும் பயின்று வரும் பகுதிகளாக

விளங்குகின்றன. அரங்கேற்றுக் காதையில் பண்டைய இசை நூல் குறிப்புகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

இடைக்காலத்தில் தேவாரம், திருவாசகம், கந்தபுராணக் கீர்த்தனை, பெரிய புராணக் கீர்த்தனை முதலியன தோன்றின. மாணிக்க வாசகர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோர் இசைத் தமிழை வளர்த்த பெருமைக்குரியவர்கள். மக்கள் மத்தியில் இசைத்தமிழின் தனித்துவத்தை எடுத்துக் கூறியவர்கள். ஆழ்வார்களும் சிறந்த இசைப் பாக்களைப் பாடி இசைத்தமிழை செழிக்கச் செய்தனர்.

## நாடகத் தமிழ்

இயற்றமிழும், இசைத்தமிழும் கலக்க நாடகத்தமிழ் பிறக்கும். பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் முதலிய பழைய நாடகத்தமிழ் நூல்களெல்லாம் அழிந்துவிட்டன. எஞ்சியிருந்த ஒரு சில நூல்களும் பிற்காலத்தில் தமிழகத்தில் புகுந்த சமண பௌத்த சமயங்களால் வெறுக்கப்பட்டு அழிந்தொழிந்தன.

அக்காலத்தில் நடிக்கப்பட்டவையெல்லாம் நாட்டியங்களேயாகும். அவை கூத்து என்ற பெயரால் வழங்கப்பட்டன. பிங்கல நிகண்டு ஆசிரியர் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழைக் கூறி நாடகத்தை விளக்கும் போது அதைக் கூத்து என்று குறிப்பிட்டு அதன் பல வகை களையும் எடுத்துரைக்கின்றார். நாடகம் என்ற சொல்லாட்சி, 'நாடக வழக்கினும்' எனத் தொல்காப்பியத்திலும்

**"நாடக மகளி ராடுகளத் தெடுத்த**
**வீசிவீங் கின்னியங் கடுப்ப..."**

என்று பெரும்பாணாற்றுப் படையிலும்,

**"நாடக நன்னூல் நன்கு கடைப்பிடித்து"**

என்று சிலப்பதிகாரத்திலும்,

**"நடமே நாடகம் கண்ணுள் நாட்டம்"**

என்று திவாகர நிகண்டிலும் இன்னும் பல இலக்கண இலக்கியங்களிலும் இடம் பெற்றிருக்கின்றன. பட்டினப்பாலையில் உருத்திரங் கண்ணனார் 'பாடலோர்த்தும் நாடகம் நயந்தும்' என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு இடம் பெற்றுள்ள நாடகம் என்ற சொல் நாட்டியத்தையே காட்டி நிற்கின்றது என இலக்கிய ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழ்க் கூத்து மறுமலர்ச்சி அடைந்தது. சைவ, வைணவ சமயங்களின் எழுச்சியால் இசைப்

பாடல்கள் பேணப்பட்டன. கூத்தும் மக்களால் போற்றப்பட்டது. கோயில்களின் முற்றம் கூத்தாடுவதற்குரிய அரங்கமாயிற்று. திருவாரூர்க் கோயிலில் ஒரு நாடக மகள் தனது கூத்தாற்றலை அரசர் முன் அரங்கேற்றி 'பூங்கோயில் நாயகத் தலைக் கோலி' என்ற பட்டம் பெற்ற செய்தியைச் சோழர் காலக் கல்வெட்டு எடுத்துக் காட்டுகிறது.

பழங்காலக் கூத்து வகையில் இருந்து தான் தற்கால நாடகங்கள் பிறந்தன. தொடக்கத்தில் கூத்தும் பாட்டும் அபிநயம் கொண்டதாக இருந்தது. பின்னர் அது ஒரு கதையைத் தழுவியதாக மாறியது. சமயச் சார்பான கதைகள் திருவிழாக்கள் போன்ற முக்கியமான நாட்களில் நாடகங்களாக நடிக்கப்பட்டன. தஞ்சை பெரிய கோயிலில் 'இராஜ ராஜேஸ்வர நாடகமும்' கமலாயப் பட்டர் என்பவர் 'பூம்புலியூர் நாடகத்தை'யும் இயற்றி மன்னனால் பரிசு பெற்றதையும் கல்வெட்டுச் செய்திகள் உணர்த்துகின்றன.

17ஆம் நூற்றாண்டில் முக்கூடற்பள்ளு, குருகூர்ப்பள்ளு, குற்றாலக் குறவஞ்சி போன்ற நாடக நூல்களும் 18ஆம் நூற்றாண்டில் நாடகக் கீர்த்தனைகளும் தோன்றின. 19ஆம் நூற்றாண்டில் தமிழ் நாடக வளர்ச்சி பெருமளவிற்கு ஏற்பட்டது. மேல்நாட்டு நாடக முறையைப் பின்பற்றிப் பலர் தமிழில் நாடகங்கள் ஆக்க முனைந்தனர்.

நாட்டியம், கூத்தாக மாறி நாடகமாக வளர்ச்சி பெற்று இன்று அறிவியலின் ஆக்கத்தால் திரைப்படம் என்ற நிலைக்கு வளர்ந்திருக்கின்றது.

"வாழ்க்கை என்பது ஒரு நிலையம். இந்நிலையத்துக்குக் கால் எது? சுவர் எது? கூரை எது? இயல் கால், இசை சுவர், நாடகம் கூரை. இவ்வாறு அமைவது வாழ்க்கை நிலையம். இதுவே தமிழ் நிலையம்", முத்தமிழ் நிலையம்" என்ற திரு.வி.க.வின் கருத்து நினைத்தற்குரியது. இவ்வாறு தமிழ்மொழி இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் மொழியாக இன்றளவும் ஏற்றம் பெற்று சிறந்து விளங்குகின்றது.

**இசைத்தமிழ் நாடகத்தமிழ் குறித்த வரலாற்று அடிப்படையிலான செய்திகள் அந்தந்தத் தலைப்புகளில் விரிவாகத் தரப்பட்டுள்ளன.**

## 2

# சங்கமும் தமிழும்

சிறப்பாகத் தமிழ் வளர்த்த பெருமை பாண்டியரையே சாரும். பாண்டியர் தலைநகரங்களில் தமிழ்ச் சான்றோர் கூடி, தமிழ் வளர்ச்சியிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டனர். பிரெஞ்சு மொழியின் வளர்ச்சிக்காக, பிரெஞ்சுக் கலைக்கழகம் (French Academy) தோன்றியதைப் போல் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகத் தமிழ்ச் சங்கங்கள் தோன்றின. அச்சங்கங்களிலே புலவர் பலர் வீற்றிருந்து பல இலக்கிய இலக்கணங்களைத் தோற்றுவித்தனர். இத்தகைய பெருமை வாய்ந்த புலவர்கள், தம் வரலாறு பற்றியும், தம்மால் நிறுவப்பட்ட சங்கத்தைப் பற்றியும் தாமே எழுதிப் போற்றாமல் இருந்துவிட்டனர். பின்னாளில் சிலர் தங்கள் காலத்தில் நிலவிய செய்திகளின் அடிப்படையில் அவற்றைக் குறித்து வைத்தனர். 'இறையனார் அகப்பொருள்' என்ற நூலுக்கு உரை எழுதிய உரையாசிரியர் தரும் குறிப்புகளின் துணைகொண்டு, சங்கத்தைப் பற்றிய செய்திகளைக் காண்போம்.

### முதற்சங்கம்

| | | |
|---|---|---|
| நிறுவியவன் | - | பாண்டிய மன்னன் காய்சின வழுதி |
| இடம் | - | குமரியாற்றங்கரை தென்மதுரை |
| ஆதரித்தவர்கள் | - | காய்சினவழுதி முதல் கடுங்கோன் வரை 89 பாண்டிய அரசர்கள் |
| பாடிய புலவர்கள் | - | 4449 பேர் |
| சங்க உறுப்பினர்கள் | - | 549 பேர் |
| நிலவிய ஆண்டு | - | 4440 ஆண்டுகள் |
| முதன்மையான புலவர்கள் | - | சிவபெருமான், முருகவேள், அகத்தியர், முரஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவர். |

| | | |
|---|---|---|
| இயற்றப்பட்ட நூல்கள் | - | பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை. |
| இலக்கணநூல் | - | அகத்தியம் |

**இடைச்சங்கம்**

| | | |
|---|---|---|
| நிறுவியவன் | - | கடுங்கோன் |
| இடம் | - | வளநாட்டில் கபாடபுரம் |
| ஆதரித்தவர்கள் | - | வெண்டேர் செழியன் முதல் முடத் திருமாறன் வரை 59 பாண்டிய அரசர்கள் |
| பாடிய புலவர்கள் | - | 3700 பேர் |
| சங்க உறுப்பினர்கள் | - | 59 பேர் |
| நிலவிய ஆண்டு | - | 3700 ஆண்டுகள் |
| முதன்மையான புலவர்கள் | - | அகத்தியர், தொல்காப்பியர், மோசி, வெள்ளூர்க் காப்பியனார், சிறுபாண்டரங்கன், திரையன்மாறன். |
| இயற்றப்பட்ட நூல்கள் | - | பெருங்கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை, அகத்தியம், தொல் காப்பியம், மாபுராணம், பூத புராணம், இசை நுணுக்கம் முதலியன. |
| இலக்கண நூல் | - | அகத்தியமும் தொல்காப்பியமும் |

**கடைச்சங்கம்**

| | | |
|---|---|---|
| நிறுவியவன் | - | முடத்திருமாறன் |
| இடம் | - | தற்போதைய மதுரை |
| ஆதரித்தவர்கள் | - | முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரை 49 பாண்டிய அரசர்கள். |
| பாடிய புலவர்கள் | - | 449 பேர் |
| சங்க உறுப்பினர்கள் | - | 49 பேர் |
| நிலவிய ஆண்டு | - | 1850 ஆண்டுகள் |

| | | |
|---|---|---|
| முதன்மையான புலவர்கள் | - | சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், பெருங்குன்றூர்க் கிழார், நல்லந்துவனார், மருதனிள நாகனார், நக்கீரர். |
| இயற்றப்பட்ட நூல்கள் | - | நெடுந்தொகை, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை போன்றன. |
| இலக்கண நூல் | - | அகத்தியமும், தொல்காப்பியமும் |

முதற்சங்கம் நிலவிய தென்மதுரையும், இடைச்சங்கம் நிலவிய கபாட புரமும் கடல்கோளால் அழிந்து போன சூழலில் கடைச்சங்கம் தோற்றுவிக்கப்படுகிறது. கடைச்சங்கமும் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியின் காலத்திற்குப்பின் மறைந்தொழிந்தது. அவனுக்குப்பின் அரசாண்ட பாண்டியர்கள் சங்கம் நிறுவவில்லை. காரணம் அரசியல் குழப்பமும் மாற்றமும் எனலாம்.

களப்பிரர் படையெடுத்து தமிழகத்தைக் கைப்பற்றியதும் அவர்களுக்குப்பின் வந்த பல்லவர்கள் தமிழைப் புறக்கணித்ததும் காரணங்களாக அமைகின்றன.

மேற்சுட்டிய செய்திகளை இறையனார் களவியல் உரையிலிருந்து தெரிந்து கொள்கிறோம். இவ்வுரை எழுந்த காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டு என்று கூறுவர். இவ்வுரையாசிரியருக்குப் பின்னர்த் தோன்றிய அடியார்க்கு நல்லார், பேராசிரியர், நச்சினார்க்கினியர் போன்றவர்களும் இச்செய்திகளைக் கூறுகின்றனர்.

தவிரவும் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் எழுந்த சின்னமனூர்ச் செப்பேடும் "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்று கூறிச் சங்கம் இருந்தமையை உறுதிப்படுத்துகிறது.

**மாறுபட்ட கருத்துக்கள்**

சங்கத்தைப் பற்றிப் பல கருத்துக்கள் நிலவுகின்றன. 'சங்கம் என்ற ஒன்று தமிழகத்தில் இருந்ததில்லை' என்று ஒரு சாராரும் முதற் சங்கம், இடைச்சங்கம் பற்றிய வரலாறுகள் எல்லாம் கற்பனை; மூன்றாவது சங்கம் இருந்திருக்கலாம்' என்று பிறிதோர் சாரரும் கருதுகின்றனர்.

அவர்கள் காட்டுகின்ற காரணங்கள் -

- புத்த, சமணச்சங்கங்கள் தம் சமயங்களை வளர்க்கத் தோன்றின; அவற்றைப் போல் தமிழை வளர்க்கச் சங்கம் இருந்தது என்ற கருத்து எழுந்திருக்கலாம்.
- அகத்தியம் என்ற இலக்கண நூலைக் களவியல் உரையாசிரியர் குறிப்பிடுகிறாரே தவிர இலக்கியங்களைப் பற்றிக் குறிப்பிட வில்லை. இலக்கணம் தோன்றுவதற்கு முன்னால் பல இலக்கி யங்கள் ஒரு மொழியில் விளங்கியிருக்க வேண்டும். தவிரவும் சிவபெருமான், முருகவேள் போன்ற கடவுளர்கள் சங்கத்தில் வீற்றிருந்தார்கள் என்பதும், சங்கம் நிலவிய ஆண்டுகள், தொகை இவை பற்றிய செய்திகளும் நம்பத் தகுந்தனவாக இல்லை.
- பண்டைத் தமிழ் நாட்டில் அரசர்களும், குறுநில மன்னர்களும் ஆட்சி புரிந்தனர். இவர்கள் தங்களுக்குள் ஓயாது போரிட்டுக் கொண்டனர். இத்தகைய அமைதியற்ற ஒரு சூழ்நிலையில் புலவர்கள் ஒன்றுகூடிச் சங்கம் அமைத்திருக்க முடியாது. சங்க இலக்கியம் என்று வழங்கும் நூல்களிலேயே சங்கம் அமைத்துத் தமிழ் ஆராய்ந்தார்கள் என்ற குறிப்பு இல்லை. சங்கம் என்ற சொல்லே தமிழ்ச் சொல் இல்லை. ஆகவே சங்கம் நிலவியது என்பது வெறும் கற்பனை.
- முதற் சங்கத்திலும், இடைச்சங்கத்திலும் வீற்றிருந்தவர்கள் என்று இறையனார் களவியல் உரை குறிப்பிடும் புலவர்கள் பாடிய பாடல்களாகக் கடைச்சங்க நூல்களான புறநானூறு, நற்றிணை போன்ற நூல்களில் காணப்படுகின்றன. தொல்காப்பி யம் ஒன்றைத் தவிர வேறு எந்த முதற்சங்க நூலோ, கடைச்சங்க நூலோ கிடைக்கவில்லை. ஆகவே தமிழகத்தில் வேறு ஏதேனும் ஒரு சங்கம் நிலவியிருக்கலாம்.

### சங்கம் இருந்தமைக்குச் சான்றுகள்

பழைய மதுரையும், கபாடபுரமும் கடல் கோளால் அழிந்து விட்டன. இப்போது கடல் பகுதியாக இருக்கும் இந்து மாக்கடல் முன்பு நிலப்பகுதியாக இருந்தது என்றும் கடல் கோளால் அந்நிலப்பகுதி அழிந்துவிட்டது என்றும் மேல்நாட்டு அறிஞர்கள் ஹெக்கல் (Haiokel) ஸ்காட்எலியட் (Scott Eliot) போன்றவர்கள் கூறுகின்றனர். இப்பகுதிக்கு

இலெமூரியா (Lemoria) என்ற பெயர் வழங்கியது. இச்செய்தியைக் கடைச்சங்க காலத்து நூல்கள் தெரிவிக்கின்றன.

**"மலிதிரை ஊர்ந்துதன் மண்கடல் வௌவலின்"** (கலித்தொகை)

**"பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்**
**குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள"** (சிலப்பதிகாரம்)

இலெமூரியாவைப் பழைய தமிழ் நூல்கள் குமரிநாடு என்று குறிக்கின்றன. இரண்டாவது சங்கம் நிலவிய கபாடபுரத்தை வடமொழிக் கவிஞர்களான வான்மீகியும் வியாசரும் குறிப்பிடுகிறார்கள். ஆகவே இறையனார் களவியல் உரையாசிரியர் கூறுவன உறுதிப்படுவதை அறியலாம்.

தமிழ்ச்சான்றோரின் வாழ்வு, எளிமையும் செம்மையும் நிறைந்த வாழ்வு. தங்கள் வாழ்வில் பிறருடைய தலையீட்டை அவர்கள் எதிர் நோக்கவில்லை. ஆனால் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு அளவில் தமிழ் நாட்டில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. களப்பிரர் என்ற கூட்டத்தார் தமிழ் நாட்டில் நுழைந்தனர். இதன் பிறகே தமிழர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. முன்னோர் தேடிவைத்த அறிவுச் செல்வத்தைக் காக்க முனைந்தனர். இதன் பயனே இன்று நம்மை மகிழ்விக்கும் சங்க இலக்கிய நூல்களாகும்.

தமிழ்ச் சங்கத்தைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் தெளிவாகவும் விரிவாகவும் இல்லை. புறநானூறு, சிறுபாணாற்றுப் படை, மதுரைக் காஞ்சி போன்ற சங்க நூல்களிலும், சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற காப்பியங்களிலும் சங்கம் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

**"தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே"** (புறம், 56)

பாண்டியன் நெடுஞ்செழியன் என்ற கடைச்சங்க கால மன்னன் தான் பாடிய பாடலில் மாங்குடி மருதனாரைத் தலைவராகக் கொண்ட ஒரு புலவர் குழுவைக் குறிப்பிடுகிறான்.

**"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**
**மாங்குடி மருதன் தலைவனாக**
**உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற் புலவர்"** (புறம் 72)

**"தமிழ்நிலை பெற்ற தாங் கருமரபின் மதுரை"** (சிறுபாண்)

**"புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்**
**நிலந்தரு திருவின் நெடியோன்"** (மதுரைக் காஞ்சி)

**"தென்தமிழ் நன்நாட்டுத் தீதுதீர் மதுரை"** (சிலப்பதிகாரம்)

**"தென்தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்"** (மணிமேகலை)

இச்சான்றுகளைத் தவிர, கடைச் சங்கத்திற்குப்பின் சில நூற்றாண்டுகள் கழிந்து இலக்கியம் படைத்த ஆழ்வார்களும் நாயன்மார்களும் தம் பாடல்களில் தமிழ்ச்சங்கத்தைக் குறிப்பிடுகின்றனர்.

தருமி ஒருவனுக்கு இறைவனே ஒரு பாடல் இயற்றித் தந்தார்; அப்பாடலில் புலவர் நக்கீரர் குறை கண்டார். இதனால் இறைவன் புலவர் வடிவம் கொண்டு சங்கத்துக்கு வந்தார் என்பதைத் திருநாவுக்கரசர்,

**"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி**
**நற்கனகக் கிழிதருமிக் கருளினான் காண்"**

என்று குறிப்பிடுகிறார். திருநாவுக்கரசரின் காலத்தவரான திருஞான சம்பந்தரும் தம் திருப்பதிகம் ஒன்றில்,

**"அந்தண் மதுரைத் தொகையாக் கினானும்"**

என்று மதுரையில் நிலவிய கடைச்சங்கத்தைக் குறிப்பிடுகிறார். வைணவ அடியார்களான திருமங்கை ஆழ்வாரும், ஆண்டாளும் முறையே

**"சங்கமலி தமிழ்"**

**"சங்கத்தமிழ்"**

என்றுபாடுகின்றனர்.

**"உயர்மதிற்கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழ்"**

என்று மாணிக்கவாசகப் பெருமான் திருக்கோவையாரில் மொழிகின்றார். 'சங்கப் பலகை' என்ற வழக்கம் தமிழ்நாட்டில் வழங்குகின்றது.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள், 'தற்காலத்தில் அமைக்கப் படும் சங்கம் போல் நன்கு அமைந்து உருவான புலவர் குழு ஒன்று இருந்ததா இல்லையா என்ற ஐயம் தோன்றலாம்; ஆயினும் கற்றுத் தேர்ந்த கலைவல்லார் பலர் ஒன்றுகூடினர்; அதுவும் நினைவிலிருந்து நீங்காத தலையாலங்கானப் போர் வெற்றிக்குப் பின் வருங்காலத்தில் மக்கள் நன்மை அடைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு அவர்கள் அவ்வப்போது ஒன்றுப்பட்டனர்." என்று குறிப்பிடுவது எண்ணத்தக்கது.

**"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்"**

என்ற குறள் வள்ளுவர் காலத்துக்கு முன்னரும் அவர் காலத்தும் சங்கம் விளங்கிய நிலையை வலியுறுத்துகிறது எனலாம்.

இவ்வாறு முச்சங்கங்கள் முறையே தென்மதுரை, கபாடபுரம், மதுரை ஆகிய இடங்களில் நடைபெற்றனவென்றும் முதுபெரும் புலவர்கள் அச்சங்கங்களிலிருந்து தமிழை ஆய்ந்து வளர்த்தனர் என்றும் அவர்களைப் பாண்டிய மன்னர்கள் பேணிக்காத்தனர் என்றும் முதலிரு சங்கங்கள் கடல் கோளாலும் கடைச்சங்கம் அரசியல் குழப்பத்தாலும் அழிந்தனவென்றும் அறிகின்றோம்.

# 3

# அகத்தியரும் அகத்தியமும்

## அகத்தியர்

முதல் சங்கத்துத் தலையாய புலவர் அகத்தியர். இவர் சிவ பெருமானிடமும் முருகவேளிடமும் நூல் கேட்டவர் என்பர். 'ஆதியில் தமிழ்நூல் அகத்தியர்க் குணர்த்திய மாதொருபாகன்' எனச் சேனா வரையர் தொல்காப்பிய உரையின் கடவுள் வாழ்த்தில் குறிப்பிடு கின்றார். சிவபெருமான் தமிழை அகத்தியர்க்குக் கற்பித்த உண்மை இதனால் புலனாகிறது.

> 'அரும்மறை ஆகமம் அங்கம்
> அருங்கலை நூல் தெரிந்த அகத்தியனுக்கு
> உரைக்கும் அருள் குருவாம் குருளை'

என சிவஞானசித்தியார் குறிப்பிடுகின்றார். பாடலில் 'குருளை' என்பது முருகவேளைக் குறிக்கிறது. கந்தபுராணம், அரக்கனாகிய வாதாபி விலவலனை அகத்தியர் அடக்கிய செய்தியையும், விந்திய மலையைத் தன்னடிப்படுத்தித் தாழ்த்தியதையும் தெரிவிக்கின்றது.

## ஆரியரா திராவிடரா?

சிவபெருமானின் திருமணத்தின்போது தேவகணங்கள் இமயலை யில் கூட வடக்கும் தெற்கும் நிலை குலைந்ததாகவும், அப்போது சிவபெருமானின் ஆணையை ஏற்றுத் தென்னகம் வந்து பொதிய மலையில் தங்கி வடக்கையும் தெற்கையும் சமன் செய்தார் எனக் கூறுவர். விதர்ப்ப நாட்டு அரசன் மகள் 'உலோபா' என்பவளை மணம் செய்ததாகவும், சித்தன் என்ற மகன் பிறந்ததாகவும் செய்தி உண்டு. வடநாட்டுப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டதால் இவரை வடநாட்டினர் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் இவர் எழுதியதாகச் சூத்திரங்களோ, வேதங்களோ வேறு இலக்கியங்களோ வடமொழியில் இல்லை. எனவே இவரை ஆரிய வேத முனிவர்களில் ஒருவராகக் கருத முடியாது என்பர்.

தென்னாட்டில் இருந்த காலத்தில் இவரது கமண்டல நீரைக் காகம் கவிழ்த்துவிட அந்நீர்க் காவிரியாக ஓடியது என்று சிவப்பிரகாசசுவாமிகள் 'பிரபுலிங்கலீலை' யில் கூறுகின்றார். மணிமேகலையும்,

**'அமரமுனிவன் அகத்தியன் தனாது**
**காகங் கவிழ்த்த காவிரிப் பாவை'**

என்று எடுத்துரைக்கின்றது. அகத்தியர் தமிழர் என்றும், தேவர் அல்லர் என்றும் பாண்டிய மரபாகிய திங்கள் மரபைச் சேர்ந்தவரென்றும் கொள்வதே பொருத்தம் என்பது ஆய்வாளர்களின் முடிவு.

**அகத்தியம்**

அகத்தியர் சிறந்த இலக்கண அறிவுடையவர். இவர் நக்கீரருக்கு இலக்கணம் அறிவுறுத்தியதாகத் திருவிளையாடல் புராணம் கூறுகின்றது. இவரே அகத்தியம் எனும் நூலை எழுதியிருக்க வேண்டும் என்றும் அந்நூலில் பன்னீராயிரம் சூத்திரங்கள் இருந்தனவென்றும் கூறுவர். முதல் சங்கத்தார்க்கும் இடைச்சங்கத்தார்க்கும் முதன்மை நூலாக அகத்தியம் திகழ்ந்தது என்பதை இறையனார் அகப்பொருள் இயம்புகின்றது. பன்னிரு படலப் பாயிரமாகக் கூறப்படும் செய்யுள் ஒன்றில்,

**"ஆனாப் பெருமை அகத்தியன் என்னும்**
**அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்**
**பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோன்**
**நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்"**

என அகத்தியம் குறிப்பிடுகின்றது. இலக்கியமும் இலக்கணமும் பற்றி அகத்திய நூற்பா ஒன்று தெளிவுபடுத்துகின்றது.

**"இலக்கிய மின்றி இலக்கணம் இன்றே;**
**எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே;**
**எள்ளினின்(று) எண்ணெய் எடுப்பது போல**
**இலக்கியத் தினின் (று) எடுபடும் இலக்கண்"**

இலக்கியத்திலிருந்துதான் இலக்கணம் பிறக்கிறதென்பது அகத்தியர் கருத்தாகும். அகத்திய நூற்பாக்கள் முழுமையும் கிடைக்கவில்லை. உரையாசிரியர்களும் இலக்கண ஆசிரியர்களும் சில நூற்பாக்களை எடுத்தாண்டுள்ளனர். அவற்றை ஆராய்ந்த அறிஞர்கள் அகத்தியம் முத்தமிழ் இலக்கணம் அடங்கியது என்கின்றனர். ஆனால் நமக்கு இயற்றமிழ் இலக்கண நூற்பாக்கள் சிலவே கிடைத்துள்ளன.

அகத்தியர் இசைத்தமிழ் இலக்கணமும், கூத்திலக்கணமும் செய்தார் என்ற செய்தியை அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார அந்திமாலைச் சிறப்பு செய்காதை மேற்கோளாகக் காட்டும்.

**"அவை தாம்,**
**சாந்திக் கூத்தும் விநோதக் கூத்தும் என்**

**றாய்ந்துற வகுத்தனன் அகத்தியன் றானே,**
**எழுவகைக் கூத்தும் இழி குலத்தோரை**
**யாட வகுத்தனன் அகத்தியன் றானே"**

என்ற பாடலால் அறியலாம்.

**"அ இ உ எ ஒக் குறிலாகும்"**

**"ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடிலாகும்"**

**"அ இ உ அம் மூன்றும் சுட்டிற் சுட்டே"**

**"வல்லெழுத்தாவன க ச ட த ப ற"**

**"மெல்லெழுத்தாவன ங ஞ ண ந ம ன"**

ஆகியன குறிப்பிடத்தக்க அகத்திய நூற்பாக்களாகும். தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணாரும் அகத்திய நூற்பாக்களை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார் என்பது சுட்டத்தக்கது.

**அகத்தியரின் மாணாக்கர்**

தொல்காப்பியர், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகள், வாய்ப்பியன், பனம்பாரன், கழாரம்பன், அவிநயன், காக்கைபாடினி, நற்றத்தன், வாமனன் ஆகிய பன்னிருவர் அகத்தியரின் மாணவர்கள் என்பதையும் அவர்கள் ஆக்கிய நூல் பன்னிருபடலம் என்பதையும்,

**"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்**
**தென்மலை யிருந்த சீர்சால் முனிவன்**
**தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த**
**துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதல்**
**பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த**
**பன்னிரு படலம் பழிப்பின் றுணர்ந்தோன்"**

என்ற புறப்பொருள் வெண்பாமாலை சிறப்புப்பாயிரத்தின் மூலம் அறியலாம். இவர்களுள் தொல்காப்பியர் முதன்மை மாணாக்கராக விளங்கினார் என்பது புலனாகிறது.

அகத்தியரைப் பற்றிய கற்பனைக் கதைகள் இருப்பினும் அவர் தமிழ் மொழியில் கூர்மையான அறிவும் ஆழ்ந்த புலமையும் கொண்ட முது புலவர் என்பதும் அகத்தியம் என்ற அரிய பெரிய இலக்கண நூலைப் படைத்த அறிவாளர் என்பதும் மேற்சுட்டிய செய்திகளிலிருந்து வெளிப்படும் உண்மைகளாகும்.

4

# முதல் நூல் தொல்காப்பியம்

தமிழ் மொழியின் சிறப்பையும், உயர்வையும் இறவாத் தன்மை யுடைய தமிழ்நூல்கள் பறைசாற்றுகின்றன. அந்நூல்கள் அனைத்திலும் தொன்மையானதாகவும் கிடைக்கும் நூல்களில் முதல் நூலாகவும் விளங்குவது தொல்காப்பியம் ஆகும். திருக்குறள் மக்கட்கு உயிர் நூலாகத் திகழ்வது போலத் தொல்காப்பியம் தமிழுக்கு உயிர்நூலாகத் திகழ்கிறது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப் பெற்ற நூல் என்றாலும் இன்றும் அறிஞர்கள் உணர்ந்து போற்றக்கூடிய நுண்ணிய கருத்துக்கள் பல இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

## ஆசிரியர்

தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர் ஆவார். தொல் காப்பியரைப் பற்றிய முழு விவரத்தையும் அறிய முடியவில்லை. தொல் காப்பியத்திற்குப் பனம்பாரனார் இயற்றிய பாயிரமும், நூலினுள் அமை யும் அகச்சான்றுகளுமே ஆசிரியரின் வாழ்க்கை வரலாற்றை அறியத் துணை செய்கின்றன. தொல்காப்பியன் என்பது ஆசிரியரின் இயற் பெயரே என்று கொள்வர். தொல்காப்பியன் என்ற தமது பெயரையே தம்மால் இயற்றப் பெற்ற நூலுக்கும் பெயராக அமைத்தார். ஆசிரியர் பிறந்த ஊரைப் பற்றித் தெரிந்து கொள்ள இயலவில்லை. ஆசிரியர் காப்பியக்குடி என்ற குடியில் பிறந்தவர் என்றும், அகத்தியரின் மாணவர் என்றும் கூறுவர். தவிரவும் தொல்காப்பியர் சமதக்கினியின் புதல்வ ரென்றும், திரணதூமாக்கினி எனும் இயற்பெயரையுடையவர் என்றும் கூறுவர். இச்செய்திக்குத் துணையாகச் சான்றுகள் எவையும் இல்லை.

## நூலின் பிறப்பும் சிறப்பும்

தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சியில் நாட்டங்கொண்டிருந்த தொல்காப்பியனார் தமிழில் இலக்கண நூல் இயற்றித் தமிழ்த் தொண்டு புரிய எண்ணினார். நிலந்தரு திருவின் பாண்டியன் அவையில்

அதங்கோட்டு ஆசான் முன்னிலையில் அரங்கேறியது என்பதை சிறப்புப்பாயிரத்தின் மூலம் அறிய முடிகின்றது. கற்றார் கல்லாதார் ஆகிய எல்லா மக்களும் பொருள் உணர்ந்து பேசுமாறு எளிய சொற்களாகிய வழக்கு மொழி(பேச்சு மொழி)யையும் திருந்திய சொற்களாலாகிய செய்யுள் மொழியையும் ஆசிரியர் ஆராய்ந்து உணர்ந்து தமிழ் மொழியின் இலக்கணத்தை இயற்றினார். பின் வந்த தமிழிலக்கண ஆசிரியரெல்லோரும் தொல்காப்பியனார் வகுத்துரைத்த ஆணையின் வழியே தம் நூல்களை இயற்றினார்.

உலகுக்கு என்று ஒரு நூலை இயற்றியுதவிய வள்ளுவரும் தொல்காப்பியரின் மொழிகளைப் பொன்னே போல் போற்றி அம்மொழிகளைத் தம் நூலில் ஆண்டுள்ளார். தொல்காப்பியருக்கு முன்பும் தமிழில் சிறந்த இலக்கண ஆசிரியர் பலர் இருந்திருத்தல் வேண்டும் என்பதையும் அந்நல்லாசிரியர்களால் தனிச்சிறப்புடைய நூல்கள் பல இயற்றப்பெற்று இருக்க வேண்டும் என்பதையும் 'என்ப; என்மனார்; எனமனார்புலவர்' போன்ற குறிப்புகளில் சுட்டிக் காட்டும் தொல்காப்பியர், அவர்களின் கொள்கைகளையும், தம் காலத்து மலர்ந்த கொள்கைகளையும், இனி வருங்காலத்தில் தமிழில் இயற்கையாக வரப்போகும் மாறுதல்களையும் நன்கு தெளிந்து நூலை இயற்றியதனாலேயே இன்றும் தொல்காப்பியம் தமிழின் உயிர் போல் விளங்குகின்றது.

ஆசிரியர் வடமொழியும் நன்கு அறிந்தவர், வடமொழியின் மிகப் பழைய இலக்கண இலக்கியங்களைக் கற்றவர். இவருடைய காலத்தில் வடமொழி, தமிழோடு தொடர்புகொள்ளத் தொடங்கியது. சங்கச் செய்யுட்களும் திருக்குறளும் தோன்றுவதற்கு முன்பே ஆசிரியர் வாழ்ந்திருக்க வேண்டும். ஆசிரியரின் சமயத்தை அறியும் வகையில் நூலில் அகச்சான்றுகள் ஏதும் இல்லை.

### அமைப்பும் பகுப்பும்

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களை உடையது. ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒன்பது இயல்களாக மொத்தம் இருபத்தேழு இயல்களைக் கொண்டது. சிறப்புப்பாயிரம் நீங்கலாக நூலில் 1610 நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன. எழுத்ததிகாரம் 483 நூற்பாக்களையும், சொல்லதிகாரம் 463 நூற்பாக்களையும் பொருளதிகாரம் 664 நூற்பாக்களையும் கொண்டு விளங்குகின்றது.

**எழுத்ததிகாரம்**

எழுத்துக்களின் இலக்கணத்தை முறைப்பட விரிந்துரைக்கும் பகுதி எழுத்ததிகாரம். ஆசிரியர் தாம் கூற எடுத்துக்கொண்ட எழுத்திலக்கணத்தை,

| | |
|---|---|
| • நூன் மரபு | 33 |
| • மொழி மரபு | 49 |
| • பிறப்பியல் | 20 |
| • புணரியல் | 40 |
| • தொகை மரபு | 30 |
| • உருபியல் | 30 |
| • உயிர் மயங்கியல் | 93 |
| • புள்ளி மயங்கியல் | 110 |
| • குற்றியலுகரப் புணரியல் | 78 |
| | 483 |

என ஒன்பது இயல்களாகப்பகுத்துக் கொண்டு விளக்குகிறார். நூன் மரபின் தொடக்கத்தில் எழுத்துக்களின் வகைகளைப் பேசுகின்றார். தமிழ் எழுத்துக்கள் முதல், சார்பு என இருவகைப்படும் என்பதை,

"எழுத்தெனப்படுப
அகர முதல்
னகர இறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே"

என்ற முதல் நூற்பாவில் குறிப்பிடுகின்றார். குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய மூன்றும் சார்பெழுத்துக்கள் என்கிறார். ஒருமை, பன்மை, எழுத்துக்களின் வடிவம், வல்லினம், மெல்லினம், இடையினம், மெய்மயக்கம் முதலிய செய்திகளையும் விளக்குகிறார்.

மொழிமரபில், சார்பெழுத்துக்கள், அளபெடைகள், எழுத்துக்களின் இயக்கங்கள், போலி எழுத்துக்கள், மொழியின் முதல், இடை, கடையில் வரும் எழுத்துக்கள் பற்றிய தகவல்களைத் தருகின்றார். பிறப்பியலில் எழுத்துக்களின் பிறப்பை உணர்த்துகிறார். புணரியல் எழுத்துக்களின் புணரச்சியிலக்கணங்களையும், தொகை மரபில் தொகுத்து கூறுதற்குரிய புணர்ச்சி இலக்கணங்களையும், உருபியலில் உருபெழுத்துக்களின் புணர்ச்சியிலக்கணங்களையும், உயிர் மயங்கியலில் உயிரீறுகளின் புணர்ச்சியிலக்கணங்களையும், புள்ளி மயங்கியலில் மெய்யீறுகளின் புணர்ச்சியிலக்கணங்களையும், குற்றியலுகரப் புணரியலில் குற்றியலுகர ஈறுகட்குரிய புணர்ச்சியிலக்கணங்களையும் விரிவாக விளக்கியுள்ளார்.

**சொல்லதிகாரம்**

சொற்களைப்பற்றிப் பேசுவது சொல்லதிகாரம். தமிழ்ச்சொல்லின் சிறப்பு, திணை, பால் முதலிய உயிர்ப்பகுப்பு, தமிழர் நாகரிகச் சொல் திறமை, சொல்லுக்குரிய விதி போன்ற தகவல்களை,

| | | |
|---|---|---|
| o | கிளவியாக்கம் | 62 |
| o | வேற்றுமையியல் | 22 |
| o | வேற்றுமை மயங்கியல் | 35 |
| o | விளி மரபு | 37 |
| o | பெயரியல் | 43 |
| o | வினையியல் | 51 |
| o | இடையியல் | 48 |
| o | உரியியல் | 98 |
| o | எச்சவியல் | 67 |
| | | 463 |

என ஒன்பது இயல்களாக வகுத்துக்கொண்டு விவரிக்கிறார். கிளவியாக்கத்தில் தமிழ்ச்சொற்கள் அனைத்தும் உயர்திணை, அஃறிணை என்ற இரு பிரிவுக்குள் அடங்கும் என்பதை,

"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே"

என்ற நூற்பாவில் அறிவிப்பதோடு உயர்திணைச் சொற்களை ஆண்பால், பெண்பால், பலர்பால் என்றும் அஃறிணைச் சொற்களை ஒன்றன்பால், பலவின்பால் என்றும் பிரித்து விளக்குகின்றார்.

**வேற்றுமையியலில்** பெயர்கள் உருபேற்றுப்பொருள் வேற்றுமைப் படும் இயல்பையும், வேற்றுமை ஏழென்றும், விளி வேற்றுமை அதனோடு சேர எட்டென்றும் சுட்டுவதை

"அவை தாம்
பெயர் ஐ ஒ டு கு
கள் அது கண் விளியென்னும் ஈற்ற"

என்ற நூற்பா புலப்படுத்துகின்றது. வேற்றுமை மயங்கியலில் வேற்றுமை உருபுகள் தம்முள் மயங்கிப் பொருள் வேறுபாடு கொள்ளும் தன்மையும். விளி மரபில் சொற்கள் விளியேற்கும் முறையும் உணர்த்தப்படுகின்றன. பெயரியலில் பெயர்ச்சொல்லின் இலக்கணம் கூற முனையும் ஆசிரியர் எல்லாச் சொல்லும் பொருள் உணர்த்தும் எனக் கூறுவதை,

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"

என்ற நூற்பா எடுத்துக்காட்டுகிறது. வினையியலில் காலத்தைப் பற்றியும், இடையியலில் இடைச்சொல் பெயரொடும் வினையோடும் சேர்ந்து வரும் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார். உரியியலில் உரிச்சொல்லின் இலக்கணம் கூறுவதோடு உறு, தவ, நனியென்பன பகுதியென்னும் குறிப்புப் பொருளை உணர்த்தும் என உரைக்கிறார், எச்சவியலில் கிளவியாக்கம் முதல் உரியியல் வரையிலான இயல்களில் கூறப்படாத செய்திகளைத் தொகுத்துரைக்கிறார். சொற்களின் பொருளை உணர்த்தும் அகராதி வகை தொல்காப்பிய காலத்திலேயே வழக்கத்திற்கு வந்துவிட்டதை எச்சவியல் நூற்பா உறுதிசெய்கிறது. பிறமொழிச் சொற்கள் தமிழில் வந்து கலந்ததால், இருமொழிக்கும் பொதுவான எழுத்துக்களை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற விதியை,

"வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே"

என்ற நூற்பாவின் வாயிலாகச் சுட்டுகிறார். இக்கருத்து தற்காலத்தில் தமிழ்க்கலைச் சொல்லாக்கப் பணியிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

## பொருளதிகாரம்

வேறு மொழிகளில் இல்லாத தமிழுக்கே உரிய தனி வகையான இலக்கிய, இலக்கணப்பகுதி பொருளதிகாரம். இலக்கியத்தில் அமையத்தக்க பொருளுக்கு இலக்கணம் கூறுகிறது. இவ்வதிகாரத்தை வாழ்க்கையின் இலக்கணம் கூறும் பகுதி எனக்கூறுவது பொருந்தும். வாழ்க்கைக் கூறாகிய அகம், புறம், களவு, கற்புப்பாகுபாடு, மெய்ப்பாட்டுக் களங்கள், உவமங்கள், பாவின் பண்பு, மரபு, முறை முதலிய முதன்மையானத் தகவல்களை,

| | |
|---|---|
| • அகத்திணையியல் | 55 |
| • புறத்திணையியல் | 36 |
| • களவியல் | 50 |
| • கற்பியல் | 53 |
| • பொருளியல் | 54 |
| • மெய்ப்பாட்டியல் | 27 |
| • உவமயியல் | 37 |
| • செய்யுளியல் | 241 |
| • மரபியல் | 111 |
| | 664 |

என்ற ஒன்பது இயல்களில் விரிவாகப் பேசுகின்றார். அகத்திணையியல் இன்ப ஒழுக்கத்தின் இயல்புகளைப் பேசுகின்றது. குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் முதலிய நிலப்பாகுபாடுகளையும் முதல், கரு, உரி முதலிய அகக்கூறுபாடுகளையும் திறம்பட எடுத்துரைக்கின்றது. அகப்பொருள் ஏழுவகைப்படும் என்பதை,

**"கைக்கிளை முதலா பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப"**

என்ற நூற்பாவால் அறியலாம். முதல் பொருளை நிலமும் காலம் என பிரித்துக் காட்டும் ஆசிரியர்,

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"**

என்ற நூற்பாவில் நிலங்கள் நான்கையும் அவற்றிற்குரிய தெய்வங் களையும் நிரல்படக் கூறுகின்றார். புறத்திணையியலில் வீரர்களின் மேம்பாட்டையும், அரசன் படைகளை நடத்தும் முறைகளையும், போர் புரியும் திறன்களையும் சொல்வதோடு வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய புறத்திணைகளின் இலக்கணங் களையும் எடுத்துக்காட்டுகின்றார்.

களவியல், களவொழுக்கத்தின் இயல்பைக் கூறுகின்றது. கள வொழுக்கம், இயற்கைப் புணர்ச்சி என்பதைக்கூறும் போது தலைவன் இயல்பை

**"பெருமையும் உரனும் ஆடூஉ மேன"**

என்ற நூற்பாவிலும், தலைவிக்குரிய இயல்பை,

**"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற் குரிய என்ப"**

என்ற நூற்பாவிலும் புலப்படுத்துகின்றார். தலைவன், தலைவி, தோழி, செவிலி ஆகியோரது நிலைகளும் பகற்குறி, இரவுக்குறி போன்ற செய்தி களும் செறிவாக இடம் பெற்றுள்ளன. கற்பியலில் களவு வாழ்க்கைக்குப் பிறகு தலைவனும் தலைவியும் திருமணம் செய்து வாழும் நிலை பேசப் படுகின்றது. தலைவன், தலைவியைக் கொடுப்பதற்குரியவர் கொடுக்க

ஏற்றுக்கொள்வதும் இல்லையெனில் உடன் போக்கால் தலைவியை அடைவதும் உண்டு என்ற செய்தியை

"கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"

"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலையான"

முதலிய நூற்பாக்களின் வழி அறியலாம். பொருளியலில் அகப் பொருள், புறப்பொருளுக்கு உரியனவும் அறத்தொடு நிற்றல், வரைவு கடாதல், புலனெறி வழக்குகள் போன்ற செய்திகளையும் எடுத்துக் கூறுகிறார்.

மெய்ப்பாட்டியல் பொருள் இலக்கணத்திற்குரிய மெய்ப்பாடுகளின் இயல்பை உணர்த்துகிறது. மெய்ப்பாடு என்பது மக்களின் உணர்ச்சி நிலையாகும். வடநூலார் மெய்ப்பாடுகளை ஒன்பது என்பர். ஆனால் தொல்காப்பியர்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை யென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப"

என்ற நூற்பாவில் மெய்ப்பாடுகள் எட்டு என்பதைத் தெளிவுபடுத்தவ தோடு அவை தோன்றுவதற்குரிய நிலைக்களங்களையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

அகத்திணைக்குரிய மெய்ப்பாடுகளைக் கூறும் ஆசிரியர்,

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

எனத் தலைவனுக்கும் தலைவிக்கும் இருக்க வேண்டிய பத்துப் பொருத்தங்களைச் சுட்டுவது தனிச்சிறப்பு.

உவமையியலில் உவம இலக்கணங்களையும், உவமஉருவு, உவமையை உணரும் முறை, உள்ளுறை உவமம் போன்ற செய்தி களைத் தருகின்றார். செய்யுளியலில் செய்யுள் இலக்கணங்களைத் தொகுத்துரைக்கின்றார். செய்யுளின் உறுப்புகளாகிய மாத்திரை, எழுத்து.

அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா முதலிய செய்திகளும் வண்ணம், வனப்பு, தோல் குறித்த தகவல்களும் சிறப்பாக இடம் பெற்றுள்ளன.

மரபியல் இருவகை மரபுகளின் இலக்கணத்தை உணர்த்துகின்றது. உயிர்ப்பொருட்களின் இயல்புகளை நன்கு ஆராய்ந்து அவற்றை ஓரறிவு முதல் ஆறறிவு வரை பிரித்துக்காட்டும் திறத்தை

**"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**
**இரண்டறி வதுவே அதனொடு நாவே**
**மூன்றறி வதுவே, அவற்றொடு மூக்கே**
**நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே**
**ஆறறி வதுவே அவற்றொடு மனனே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே"**

என்ற நூற்பா எடுத்துக்காட்டுகின்றது. தொல்காப்பியரின் இப்பகுப்பு முறையை இன்றைய உயிரியல் ஆய்வாளர்களும் ஏற்றுக் கொண்டு வியப்படைகின்றனர் என்பது சுட்டத்தக்கது. ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலான உயிர்கள் எவையெவை என்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றனர். முதல் நூல், வழிநூல், உரைகண்ட நூலின் குற்றங்கள், உத்திகள் போன்ற செய்திகளையும் மரபியலில் தெளிவாக விளக்கு கின்றனர்.

தொல்காப்பியம் அன்று முதல் இன்றுவரை எல்லோராலும் படிக்கப் பட்டுப் போற்றப்படும் நூலாகத் திகழ்கின்றது. இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், கல்லாடர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் ஆகிய தமிழ் அறிஞர்கள் இந்நூலுக்கு முற்காலத்தில் உரை எழுதி இருப்பதும், தற்காலத்தில் நாவலர் ச.சோ. பாரதியார், அரசஞ்சண்முகனார் போன்ற அறிஞர்கள் உரை வகுத்திருப்பதும் தொல்காப்பியத்தின் சிறப்பை மேலும் அறிந்து கொள்வதற்குத் துணையாக அமைகின்றது.